**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 15.06.2026</u>**

**OS.259/2023**

**வா.சா.1 திருமதி.ராஜராஜேஸ்வரி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த தாவா புரோநோட் எவ்வளவு தொகைக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் ரூ.7,00,000/–க்கு எழுதப்பட்டது. ரூ.7,00,000/– நான் யாருக்கு கொடுத்தேன் என்றால் சங்கர் என்பவருக்கு கொடுத்தேன். சங்கர் எந்த ஊர் என்றால் அவர் சொந்த ஊர் எஸ்.பட்டி ஆனால் அவர் அரூரில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார். அரூரில் எங்கு சங்கர் குடியிருந்து வருகிறார் என்றால் அரூர் RC ஸ்கூல் பின்புறம் டீச்சல் காலனியில் வசித்து வருகிறார். சங்கர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். புரோநோட் எப்போது எழுதப்பட்டது என்றால் 21.12.2020–ம் தேதியில் எழுதப்பட்டது. 21.12.2020–ம் தேதியில் சங்கர் ஆசிரியராகதான் பணியாற்றினார் என்றால் சரிதான்.

2.சங்கர் தனக்கு கடன் வேண்டும் என்று எந்த தேதியில் கடன் கேட்டார் என்றால் அவர் கடன் வா்ங்குவதற்கு 1 மாதத்திற்கு முன்பு கேட்டார். நான் வீடு கட்டி கொடுக்கும் அலுவலகம் வைத்துள்ளேன் என்றால் சரிதான், நான் அன்னை கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் வீடு கட்டிகொடுக்கும் பணி செய்து அலுவலகம் நடத்தி வருகிறேன். அன்னை கன்ஸ்ட்ரக்சன் என்ற

அலுவலகம் எங்கு உள்ளது என்றால் அரூர் ரவுன்டானா சீனிவாசா காம்ப்ளக்ஸ் முதல் தளத்தில் உள்ளது. மேற்படி அலுவலகத்தில் வைத்துதான் சங்கர் என்னிடம் ரூ.7,00,000/−ம்பணம் கேட்டார் என்றால் சரிதான். அந்த பணம் ரூ.7,00,000/−ம் கொடுப்பதற்கு ஏதாவது ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் நான்எனது வீட்டில் வைத்து புரோநோட் எழுதி வாங்கிகொண்டுதான் பணம் கொடுத்தேன்.

3. அந்த புரோநோட்டை யார் வாங்கி வந்தது என்றால் சங்கர்தான் வாங்கி வந்தார். அந்த புரோநோட்டில் கையெழுத்து மட்டும்தான் உள்ளதா அல்லது ஸ்டாம்ப் ஏதாவதுத உள்ளதா என்றால் ஸ்டாம்ப் ஒட்டி அதில் அவர் கையொப்பம் செய்துள்ளார், மேலும் அதில் அவர் கைரேகையும் செய்துள்ளார். அதில் எத்தனை ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டுள்ளது என்றால் 1 ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டுள்ளது, அது 1 ரூபாய் ஸ்டாம்பா என்று எனக்கு சரியாக தெரியவில்லை, ஆனால் ஒரு ஸ்டாம்ப் ஒட்டி அதன்மேல் சங்கர் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். சங்கர் எத்தனை கையெழுத்து போட்டுக்கொடுத்தார், மேலும் அதில் கைரேகையும் செய்து கொடுத்தார். எத்தனை மணிக்கு அவர் புரோநோட் எழுதி கொடுத்தார் என்றால் மாலை 7 மணிக்கு. என் வீடு எங்கு உள்ளது என்றால் கதவு எண்.1/352, மொரப்பூர், ராசலாம்பட்டி, ஓம்சக்தி நகர், ரேசன் கடை பின்புறம் உள்ளது. மேற்படி வீட்டில்தான் சங்கருக்கு பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

4. பணம் கொடுக்கல் வாங்கலுக்கு புரோநோட்டில் வேறு சாட்சி போடப்பட்டுள்ளதா என்றால் சங்கரின் மனைவி தேன்மொழி ஒரு சாட்சி

கையெழுத்தும், உடன் இரண்டுபேர் வந்தார்கள் அவர்களில் ஒருவர் திருலோகன், அவர் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டார், தேன்மொழி இரண்டாவதாக கையெழுத்து போட்டார், எழுதியது தீர்த்தான் அவரும் அதில் கையெழுத்து போட்டார். திருலோகன் எந்த ஊர் என்றால் அவர் மொரப்பூர். அவரது அப்பா பெயர் என்ன என்றால் வைரவன் என்று நினைக்கிறேன் சரியாக நினைவில்லை. தீத்தான் எந்த ஊர் என்றால் அவரும் மொரப்பூர்தான்.தீத்தான் அப்பா பெயர் என்ன என்றால் சிங்காரவேலு. திருலோகன், தீத்தான் ஆகியோரை யார் கூட்டி வந்தது என்றால் சங்கர்தான் கூட்டி வந்தார்.

5. ரூ.7,00,000/−த்தை என்ன வகை தாள்களாக கொடுத்தேன் என்றால் ரூ.500/− தாள்களாக கொடுத்தேன். எந்த நாளில் புரோநோட் எழுதப்பட்டது என்றால் திங்கட்கிழமை. புரோநோட் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் நாளில் சங்கர் திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், புதுப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான், அவர் பணியை முடித்துவிட்டு வந்துதான் எங்கள் வீட்டிற்கு வந்து பணத்தை வாங்கினார். அவர் பணிபுரியும் இடத்தில் இருந்து மொரப்பூரில்உள்ள எனது வீட்டிற்கு வரவேண்டும் என்றால் குறைந்த பட்சம் 3 மணிநேரம் ஆகும் என்றால் சரிதான், அன்றைய தினம் அவர் பர்மிசன் போட்டுவிட்டு வந்தார். சங்கர் அன்றைய தினம் பள்ளியில் பர்மிசன் போட்டுவிட்டுதான் வந்தார் என்று என்னால் நிரூபிக்க முடியுமா என்றால் அவ்வாறு நிரூபிக்க வேண்டியது அவசியம் என்றால் நான் நிரூபிப்பேன். நான் சொல்வதுபோல

பிரதிவாதி 21.12.2020–ம் தேதியில் ரூ.7,00,000/– கடன் பிரதிவாதி சங்கர் பெறவில்லை, நான் திருலோகன், தீத்தான் ஆகியோர் சேர்ந்து மோசடியாக பிரதிவாதியின் கையெழுத்தை போட்டு போலியான ஆவணத்தை உருவாக்கி இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல எந்த காலத்திலும் புரோநோட்டில் நான் சொல்வது போல சங்கர் கையெழுத்து போட்டது கிடையாது, அவர் இந்த நீதிமன்றத்தில் அவரது வழக்கறிஞருக்கு கொடுத்துள்ள வாக்காலத்தில் போட்டுள்ள கையெழுத்தை தான் அவர் பணிசெய்யும் இடத்திலும் போட்டுள்ளார், அதனால் புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து என்று கூறுவது போலியாக அவர் கையெழுத்தை போட்டு இந்தவழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர் என்முன்னிலையில் கையெழுத்து போடும்போது மாற்றிகூட போட்டிருக்கலாம்.

6. எத்தனை புரோநோட்டில் கையெழுத்து சங்கர் போட்டார் என்றால் ஒரே புரோநோட்டில்தான் சங்கர் கையெழுத்து போட்டு கைரேகை வைத்தார், அந்த கைரேகைக்கு கீழ் சங்கரின் மனைவி தேன்மொழி கைரேகை வைத்தார். புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட்ட திருலோகன் என்பவர் கைரேகை வைத்தாரா என்றால் இல்லை. ஏன் சாட்சி கையெழுத்து போட்ட தேன்மொழியிடம் கைரேகை பெற்றுள்ளேன், திருலோகனிடம் ஏன் கைரேகை வாங்கவில்லை என்றால் பணம் பெற்றுக்கொண்ட இரண்டு நபர்களின் கைரேகை போதும் என்று அந்த புரோநோட்டை எழுதிய தீத்தான்

சொன்னதால் சங்கர் மற்றும் அவரது மனைவியிடம் கைரேகை பெறப்பட்டது, சாட்சி திருலோகனிடம் கைரேகை பெறவில்லை.

7. நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.7,00,000/- பணம் சங்கருக்கும் அவரது மனைவி தேன்மொழிக்கும் நான் கொடுத்தேன் என்றால் ஆமாம். அவர்கள் 2 பேரும்தான் பணத்தை திரும்ப செலுத்த வேண்டியர்வர்கள் என்றால் சரிதான். ஏன் தேன்மொழி மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் தேன்மொழி பெயரை அப்போது சேர்த்தவேண்டும் என்று எனக்கு தோன்றவில்லை. நான் தவறான முறையில் தயார் செய்த புரோநோட் என்பதால்தான் சங்கர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அவர் மனைவி மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு புரோநோட்டில் சங்கர் என்பவர் கையெழுத்து போடவில்லை, அதை மோசடியாக சங்கர் போட்டதாக புரோநோட் தயாரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்து சங்கருடையதுதான் என்பதை நான் நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

8. வழக்குரையில் தாவா புரோநோட் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த காரணத்திற்காகவே இந்தவழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை அதனால் இந்தவழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல வக்கில் நோட்டிஸ் எதுவும் சங்கருக்கு அனுப்பவில்லை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அனுப்பியது உண்மை

அவர் வாங்கமறுத்து திருப்பி அனுப்பிவிட்டார். எவ்வளவு ரூபாய் வட்டிக்கு நான் சங்கருக்கு பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய் 1 இலட்சத்திற்கு ரூ.1/- வட்டிக்கு கொடுத்தேன். புரோநோட் எந்த மையால் எழுதப்பட்டது என்றால் புளுகலர் மையால் எழுதப்பட்டது. அது மை பேனாவா என்றால் அது பவுண்டைன் பென். புரோநோட் எழுதிய பேனாவிலேயே சங்கர் கையெழுத்து போட்டாரா என்றால் ஆமாம். திருலோகன் எந்த பேனாவில் கையெழுத்து போட்டார் என்றால் அதை நான் கவனிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் திருலோகன் கையெழுத்து செய்தது அதில் எழுதப்பட்ட மையை தவிர்த்து வேறு மையில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான், நான் அப்போது அதை கவனிக்கவில்லை. தீத்தானும், தேன்மொழியும் எந்த மையால் கையெழுத்து போட்டார்கள் என்றால்சங்கர் போட்ட அதே பேனாவில் தான் தேன்மொழியும், தீத்தானும் கையெழுத்து போட்டார்கள்.

9. புரோநோட்டில் கைரேகை வைத்தது யார் யார் கைரேகை வைத்தார்கள் என்று அதில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா புரோநோட் தவறான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் திருலோகன் ஒரு மையில் கையெழுத்தும், சங்கர் என்ற கையெழுத்து போட்டதாக சொல்லுவதும் வேறு மையில் உள்ளது, புரோநோட்டில் உள்ள கைரேகை யார் வைத்தது என்று சொல்லவில்லை இந்த காரணத்தினால் தாவா புரோநோட் தவறாக தயாரிக்கப்பட்ட புரோநோட் என்றால் சரியல்ல. என்ன தேவைக்காக சங்கர்

கடன் வாங்கினார் என்றால் வீடு கட்டவேண்டும் என்றுதான் என்னை பார்க்க வந்தார்கள், முதலில் அவர்கள் அதற்கு லோன் போடவேண்டும், அவர்கள் பெயரில் ஏற்கனவே பர்னல்லோன் இருப்பதால் அதனை அடைத்தால்தான் புதிதாக லோன் போடமுடியும் நீங்கள் கொஞ்சம் பணம் கொடுங்கள் அதனை அடைத்துவிடுகிறோம், உங்களிடமே வீடுகட்டுவதற்கான கன்ஸ்ட்ரக்சனையும் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். சங்கர் எழுதிக்கொடுத்த புரோநோட்டில் வீடு கட்டுவதற்கும், அவர் கடனை அடைப்பதற்கும் என்று எழுதவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் அவரசர தேவைக்காகவும், வீட்டுமனை வாங்குவதற்காக வேண்டி கடன் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே வாக்குமூலத்தில் சொன்ன சங்கதி உண்மை என்றால் அதை தாவா புரோநோட் குறிப்பிட்டிருப்பேன் அவ்வாறு குறிப்பிடாததாறகு காரணம் நான் புரோநோட்டை தயாரித்ததால் தான் உண்மை சங்கதியை புரோநோட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, எதற்காக பணம் வாங்கப்பட்டது என்று காரணம் புரோநோட்டில் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லைஎன்று தான் நான் கேள்விப்பட்டேன்.

10. திருலோகன், தீத்தான் ஆகியோர் அன்னை கன்ஸ்ட்ரன்சனில் வேலை செய்யக்கூடிய நபர்கள் என்றால் இல்லை. திருலோகன், தீத்தான் ஆகியோர் என்னிடம் வேலை பார்ப்பதால் அவர்கள் என் சொல்படி நடக்ககூடிய என்கையிருப்பு சாட்சிகள் என்றால் இல்லை. நான் சொல்லும் 21.12.2020–ம் தேதியில் பிரதிவாதி திருப்பத்தூர் மாவட்டத்தில் பணியில்

இருந்தார், அவர் அன்றைய தினம் மொரப்பூரில் உள்ள என் வீட்டிற்கு வரவில்லை புரோநோட்டும் எழுதிக் கொடுத்து கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆசிரியராக இருப்பதால் அவரிடம் பணம் பறிக்கவேண்டி புரோநோட் மோசடியாக தயாரிக்கப்பட்டு பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.15 16:17:44 +0530